DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 181/2017**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : எலிசபெத்ராணி
Father/ Husband Name : அல்போன்ஸ்
Village :
Taluk :
Calling :
Age :

1ம்எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜராவதிலிருந்து மாண்புமிகு.உயர்நீதிமன்றம் விலக்களித்துள்ளதால் அவர்களுக்காக வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.09.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேர்போகியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 7-8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகலில் இருதயராஜ் வீடு மற்றும் வக்கைப்போர் அருகில் போலீசார் வந்து என்னிடம் சண்டை நடந்ததா என்று கேட்டார்கள். நான் ஆமாம் சத்தம் கேட்டது என்று சொன்னேன். பிறகு விசாரணைக்கு வந்திருப்பதாக சொல்லி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 18.02.2014-ம் தேதி மதியம் 02.15 மணிக்கு தேவ கோட்டை தாலுகா காவல் நிலைய போலீசார் தேர்போகியில் உள்ள கிரேஸ்மேரி வீட்டிற்கு முன்பாக நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அவர் தயார்

செய்த பார்வை மகஜரில் 2வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.